# தமிழ் இலக்கியங்களில் முருகன்

முனைவர் ம. கீதா
உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர் - 641 043.

தமிழ் நாட்டில் எத்தனையோ கடவுள்கள், சிறுதெய்வங்கள் உண்டு. அவ்வளவு தெய்வங்களுக்கும் இல்லாத தனிச்சிறப்பு முருகனுக்குண்டு. 'முருகு' எனப்பட்ட ஓர் ஆற்றலையே தமிழர் முதலில் வணங்கினர். பின்னர் தனிமனிதச் சிந்தனை வளர்ந்த போது முருகு 'முருகன்' ஆக்கப்பட்டார். முருகனே தனித்தமிழ் கடவுளாகப் போற்றப்படுகிறான். தமிழ் மக்களின் நெஞ்சத்தில் பண்டு தொட்டே நீங்காது நிலைப்பெற்றிருக்கும் அன்பு தெய்வமாக விளங்குபவன் முருகப்பெருமான். அவனுடைய அருள்சுரக்கும் தோற்றமும், கருணையோடு அனைவரையும் காத்து நிற்கும் தன்மையுமே மக்கள் அவனை வழிபடுவதற்கு முக்கியக் காரணமாகும். அத்தகைய முருகப்பெருமானைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சிவபெருமானும் முருகனும் ஒன்றே

சிவபெருமானும் முருகனும் வேறல்ல ஒன்றே என்ற தத்துவக் கருத்தை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. ஒருகுலம், ஒரு வடிவம், ஒரு குணம் என ஒன்றும் இல்லாதவன் சிவபெருமான். அவனை வழிபடும் மெய்யடியார்கள் அவனை ஆயிரம் நாமம் கொண்டு ஏற்றிப் போற்றி வணங்கி மகிழ்வர். அவனது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய முருகப் பெருமானுக்கு வழங்கப்பெறும் பெயர்களோ அத்துணையும் தத்துவத் தொடர்புடைய காரணப் பெயர்கள் என்பதை, "வெகு கோடி நாம சம்பு குமாரா நமோநம" என அருணகிரிநாதர் போற்றுவதில் இருந்து அறியமுடிகின்றது. இருவரும் ஒரே கடவுள். ஒவ்வொரு பொருளுக்கும் தோற்றம், வாழ்வு, ஒடுக்கம் என்ற மூவகை நிலைகளைக் கொடுப்பவன் இறைவன். தொடங்குவதற்காக விரிப்பதைத் 'தோற்றநிலை' என்றும் மூடுவதற்காகக் குவிப்பதை 'ஒடுக்கநிலை' என்றும் கூறுவர். உயிர்களாகிய நமக்காகவே உலகம் முதலியவற்றைச் சிவபெருமான் தானே சிவபிரமனாக இருந்து தோற்றுவிக்கிறான். சிவ விட்டுணுவாக இருந்து காப்பாற்றுகின்றான். இறுதியில் அவற்றைச் சிவ உருத்திரனாக இருந்து ஒடுக்கவும் செய்கிறான் என்பது சித்தாந்தம்.

## சங்க இலக்கியங்களில் முருகன்

சங்க நூல்களில் முருகு, முருகன் என்ற சொற்கள் பயின்று வந்து உள்ளன. நற்றிணை முதல் புறநானூறு ஈறாக உள்ள எட்டு நூல்களிலும் முருகன் என்ற சொல் வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். எனவே சங்க காலத்தில் வாழ்ந்த மக்களிடையே முருக வழிபாடு பொதுமைக்குரிய தொன்று

சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் அக இலக்கியங்கள் காதல் கடவுளாகவும், புற இலக்கியங்கள் போர்க்கடவுளாகவும் வைத்துப் பார்க்கின்றன. இலக்கிய நெறியில் நிலங்கள் ஐந்து வகையாகப் பிரிக்கப்படுகிறது. மலையும் மலைசார்ந்த பகுதி 'குறிஞ்சி' என அழைக்கப்படுகிறது. குறிஞ்சி நிலக் கடவுளான முருகனை வீரத்தின் வடிவமாகப் போர்க்கடவுளாக வைத்து வழிபடலாயினர். மலைவாழ் மக்களின் வழிபடு தெய்வமாக முருகன் விளங்கினான். முருகனை 'மலைக்கிழவோன் என்றும் 'குன்றநாடன' என்றும் தமிழ இலக்கியங்கள் குறிப்பிடுவதை,

*"பழமுதிர் சோலை மலை கிழவோனே"*
*"விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ"* (திருமுரு. 317)
*"கறிவளர் சிலம்பின் கடவுள்"* (திருமுரு.267)
*"அருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமைப் பெருங்கல்"* (ஐங். பா-243)
(புற. பா-158)

எனவரும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

அகப்பொருளின் ஒவ்வொரு துறையிலும் முருகனுக்குப் பங்குண்டு. அக இலக்கியத் தலைவனை முருகனாக வைத்துப் பேசும் இடங்களும் உண்டு. முருகு, முருகன், வேள் என்ற சொற்களை வழங்காத அக இலக்கியங்களே இல்லை என்று கூறலாம். காதல் மிகுந்து தலைவனைக் காணப்பெறாத காரணத்தால் தலைவி உடல் மெலிந்து வருந்துவதைக் கண்ட தாய் ஏதோ தெய்வக் குற்றம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதுகின்றாள். மகளின் களவொழுக்கம் காரணமாக உடல் மெலிந்திருக்க, உண்மையுணராத பெற்றோர் முருகனுக்கு மறியறுத்து வெறியாட்டுதலை மேற்கொள்வர். இது நெடுங்காலந் தொட்டு வழங்கி வந்த ஒரு வகை தெய்வ வழிபாடு. இது முருகனைக் குறித்து ஆடப்படுவது. முருகனுக்குப் பூசை செய்யும் பூசாரியாகிய வேலனால் நிகழ்த்தப்படுவது. வேலைக்கையில் தாங்கி இவன் தெய்வ ஆவேசம் வரப்பெற்று, வெறிகொண்டு ஆடும் ஒரு வகை ஆடல்தான் வெறியாடல். இதை, "வெறியறி சிறப்பின் செவ்வாய் வேலன் வெறியாட்டயர்ந்த காந்தாரம்" (புறத்திணை) எனத் தொல்காப்பியர் சுட்டும் அளவிற்கு 'வெறியாடல்' அந்நாளில் செல்வாக்குப் பெற்றிருந்ததை அறிய முடிகின்றது.

தொல்காப்பியர் செக்கர் வண்ணனான முருகனைச் 'சேயோன்' எனக் குறிப்பிடுவதை, "சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல். பொருள். அகத். நூ.5) என்ற நூற்பா மூலம் அறிய முடிகின்றது. முருகனுக்குரிய பொருட்கள் எல்லாம் சிவப்பாகவே வைத்து வழங்கப்பட்டது என்பதை, "செய்யன், சிவந்த ஆடையன்" (திருமுரு. 206) என்ற பாடலடியின் மூலம் அறியலாம்.

### தனித்தமிழ்க் கடவுள்

தமிழர்தம் வழிபாட்டில் பல தெய்வங்கள் இருந்தாலும் தனிச்சிறப்பு முருகப் பெருமானுக்கு உண்டு. அன்று முதல் இன்று வரை 'முருகன்'



ஒருவனைத்தான் தமிழுக்குரிய தனிப்பெருங்கடவுளாகச் சான்றோர்கள் போற்று கின்றனர். தமிழ் இலக்கியங்களும் அவ்வாறே குறிப்பிடுகின்றன. இதை,

*"சங்கத் தமிழின் தலைமைப் புலவா*
*தாலோ தாலேலோ"*

என்றும், *(முத்துக்குமார. பி.த.பா.375)*

*"பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே"*

என்றும், (திருமுரு. 268)

*அருமறை தமிழ் நூலடைவே! தெரிந்துரைக்கும் புமலவோனே"*
(திருப்புகழ், பா-211)

என்றும் பாடுவதால் அறியலாம். தமிழ்நாட்டில் முருகனே முதன்மைக் கடவுள் முருகனால் தமிழ் வளர்ந்தது. தமிழை அவர் அகத்தியருக்குக் கற்றுக் கொடுத்தார் என இலக்கியங்கள் கூறுகின்றன.

### தமிழர் மணம் காதல் மணமே

சங்க காலத்தில் பலதாரமணம் இல்லை. அன்பும், பண்பும் உடைய ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழ்வதே இல்லறமாக அமைந்திருந்தது. தமிழ் மக்களின் வழிபடு கடவுளான முருகன் ஒரே மனைவியை உடையவன். அதிலும் தமிழரின் முறைப்படி களவொழுக்கத்தில் காதல் மணம் புரிந்தவன். அக்காதலியின் பெயர் வள்ளி இதை, "முருகு புணர்ந்தியன்ற வள்ளி போல" (நற். 82) என்ற பாடலடியின் மூலம் அறிய முடிகின்றது. ஆரியக்கதை வந்த பிறகே தேவ சேனைக்கு மணாளனாக முருகன் ஆக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. வள்ளி தெய்வானை திருமணம் வானுலகத்தின் தலைவனாகிய இந்திரன், சூரபதுமனை வென்றதன் பொருட்டு முருகப்பெருமானுக்குத் தன் மகளாகிய தெய்வானையை மணம் முடித்தான் என்றும், காட்டில் வாழும் குறவர்கள் தலைவனின் மகளான வள்ளியைக் களவு நெறி நின்று மணம் முடித்தான் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

### முருகனின் நாமங்கள்

முருகன் என்றால் அழகு, முருகன் அழகிய வடிவமுடையவன். தெய்வங்களிலெல்லாம் அழகிலும், வீரத்திலும் மேம்பட்டவன். சிறந்த மயிலை வாகனமாகவுடையவன். இறைவன் அருவமாயும், உருவமாயும் இருப்பவன் என்பது தத்துவநிலை. முருகனுக்கு சிவகுமரன், சரவணன், கந்தன், கடம்பன்,குமரன், சேனாதிபதி, ஞானபண்டிதன்,சுவாமிநாதன், பாலசுப்பிரமணியன், வெற்றிவேலன்,வேலாயுதம், வேலன், கங்கையின்மைந்தன், கார்த்திகேயன், பார்வதிபாலன், சூரசம்ஹாரன், தேவசேனாதிபதி, மயில் வாகனன், சேவற்கொடியோன், வள்ளி மணாளன் முதலிய பல அழகிய பெயர்களால் அழைக்கப்படுவதோடு 'தண்டாயுதபாணி' என்ற சிறப்புப் பெயரும் வழங்கப்படுகிறது.

## கோயில்கள் - ஆறுபடைவீடுகள்

சங்க கால மக்கள் தத்தம் தெய்வத்தை அமைத்து வழிபடுவதற்கு என்று திருக்கோயில்களை அமைத்திருந்தனர் என்பதை,

*"அணங்குடை முருகன் தோட்டம்"* (புறம். 299)

என்றும்,

*"தாழ்நீர் வெண்டலைப் புணரியலைக்குஞ் செந்தில் நெடுவேள்*
*நிலைஇய காமர் வியன் துறை"* (புறம். 85)

எனவரும் பாடலடிகளின் மூலம் அறிய முடிகின்றது.

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் திருவாவினன்குடி, திருவேரகம், சுவாமிமலை, பழமுதிர்சோலை எனத் திருமுருகாற்றுப்படை ஆறுபடை வீடுகளை வகுத்துரைக்கின்றது. ஆற்றுப்படையே ஆறுபடை என ஆனதாகக் கருதுவதற்கும் இடமுள்ளது. குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனிருப்பான் எனும் கருத்தில் ஒதலாந்தையார் 'முருகமர் மாமலை' எனக் குறிப்பார். எனினும், வெறியயோர்களன் காடு, சோலை, துருத்தி, ஆறு, குளம், சதுக்கம், சந்தி, கடம்பமரம், மன்றம், பொதியில், கந்துடைநிலை எனப் பல இடங்களிலும் அவன் விரும்பி உறைவான் எனத் திருமுருகாற்றுப்படை விரித்துக் கூறுகின்றது.

### முருகனிடத்தில் மக்களின் வேண்டுதல்கள்

குறிஞ்சி நில மக்களான குறவர்கள் தங்களுக்கு மழை வேண்டும் காலங்களில் மழை பெய்வதற்காகவும், மழை மிகுதியாகப் பெய்யும்போது அதனை நிறுத்துவதற்காகவும் முருகனுக்குப் பொங்கலிட்டு பூசை செய்தனர் என்று புறப்பாடல் குறிப்பிடுகின்றது. பிள்ளை இல்லாத குறவர்கள் முருகனை, வேண்டிப் பிள்ளைப்பேறு அடைந்தனர். இதை, "குன்றக் குறவ கடவுட்பேணி இரந்தனள் பெற்றவெள்விலைக் குறுமகள்" என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் மூலம் அறியலாம். பெண்கள் பிரிந்து சென்ற கணவன் மீண்டும் வர வேண்டும் என்றும், தன் வயிற்றில் கருப்பம் உண்டானால் இன்னன்ன செய்வேன் என நேர்த்திக்கடன் பூண்டும் கணவன் தேடும் பொருள் அவர்க்கு நிறையக்கிட்ட வேண்டுமென்றும், சிலர் தமது கணவர் போரில் பகைவரைக் கொன்று வெற்றி பெறுக என்றும் அருச்சனை செய்து வழிபட்டனர். பக்தர்கள் சந்தனம், பால், தேன், நந்தா விளக்கு, மணி, கயிறு, மயில் கரும்பு, யாழ், வீணை, குழல், முரசம் போன்ற பலவகைக் காணிக்கைப் பொருட்களைச் சுமந்து சென்றனர் என்பதை பரிபாடல் மூலம் அறிய முடிகின்றது.

### முருகப்பெருமானின் ஆறுமுகங்கள் - பன்னிரு கைகளின் செயல்கள்

முருகப் பெருமானின் ஆறுமுகங்களும் ஆறுவிதமாக, பன்னிரு கைகள் பன்னிரு விதமாகவும் பக்தர்களுக்கு அருள்மழை பொழிந்து வருகிறது. முருகனின் திருவடிகள் அன்பர்களைத் தாங்கி நிற்பன் திருக்கரங்கள் பகைவரை அழிக்கும்இடிபோலும் வலிமையுடையன, அவனது ஆறுதிருமுகங்களுக்கேற்ப முறையே [illegible] கரங்களின் செயல்புரியும் [illegible] காணலாம்.



1. உலக இருள் நீங்குமாறு திகழும் ஒளிமுகம். ஒருகை சூரியனின் அனலால் உலகு நிலைகுலையாதவாறு செல்லும் அந்தணரைக் காக்கும். அடுத்த கை இடுப்பில் பொருந்தியிருக்கும்.
2. ஆர்வலர்க்கு வரமளிக்கும் முகம். ஆடையமைந்த தொடை மீது ஒருகை. அங்குசம் கடாவி யானையைச் செலுத்துவது ஒருகை.
3. வேள்வி புரியும் அந்தணர்க்கு உதவும் முகம் வேல்ஏந்திய ஒரு கை கேடயம் ஏந்திய ஒரு கை.
4. கல்வியைக் கசடற விளக்கும் ஞானமுகம். ஒரு கை மார்பொடு திகழும் ஒரு கை தாரொடு பொலியும்.
5. பகைவரை அழித்துக் களவேள்வி நிகழ்த்தும் முகம். வேள்வி நிகழ்த்துமாறு மேலெழுந்து சுழன்ற நியைில் ஒரு கை. மணியை ஒலிக்கும் ஒரு கை.
6. (வள்ளியம்மையுடன் கொஞ்சுகின்ற முகம்) தேவியருக்கு மகிழ்வைத் தருவது ஒருமுகம். ஒரு கை மழை பெய்விக்கும் மற்றொரு கை வானுலக மகளிர்க்கு மணம் புரிவிக்கும்.

இவ்வாறான ஆறுமுகங்களிலும் மணிமுடிகள் ஒளிவீசும். திருச்செவிகளில் குண்டலங்கள் பொலிவுறும். திருமார்பில் ஆடவர்க்கு இலக்கணமாகிய மூன்று கோடுகள் திகழும் குன்றிமணியையொத்த செவ்வாடை உடுத்தவன், வெண்ணிற ஆடையும் தரிப்பவன், வண்டு மொய்க்காத காந்தள் மலரையும், வெட்சி மலரையும் தொடுத்த தலைக் கண்ணியையும், மார்பில் தவழும் செங்கடம்பு மாலையையும் அணிந்திருப்பவன் மேகத்தின் மின்னலையொத்த வேலாயுதம் ஏந்தியவன். கோழி ஓங்கிய வென்று அடு விறல் கொடி உடையவன். களிறு, மயில், ஆடு இவற்றை ஊர்தியாகக் கொண்டவன் என்றெல்லாம் இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன

குறிஞ்சி நிலக்கடவுளாக முருகனை மக்கள் வழிபட்டனர். தமிழ்க் கடவுள் என்றால் முருகன் என்றும் தமிழை அகத்தியருக்கு கற்றுக்கொடுத்தார் என்றும் கூறப்படுகிறது. சங்க காலந்தொட்டே முருக வழிபாடு முதன்மை நிலைபெற்றிருந்ததையும் அகப்பொருள் துறையில் முருகனுக்கு முக்கியப் பங்குண்டு என்பதையும், முருகன் மீது மக்கள் மிகுந்த அன்பு பூண்டு தமது வேண்டுதல்களைக் கூறி வழிபட்டனர் என்பதையும் இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. முருகப்பெருமான் திரு அவதாரத்தின் நோக்கமே மிகப் புனிதமானது என்றும் அசுரர்களின் தீய ஆற்றலை எல்லாம் அழித்துத் தேவர்களைக் காத்ததற்காகவே சிவபெருமான் தன் இளங்குமரனை தோற்றுவித்தார் என்றும் சிவபெருமானும் முருகனும் ஒன்றே என்ற தத்துவக் கருத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது.